පේෂ කර්මාන්ත දෙපාර්තමේන්තුව

புடவைக் கைத்தொழில் திணைக்களம்

DEPARTMENT OF TEXTILE INDUSTRY

වැය ශීර්ෂ අංක: 303

செலவினத் தலைப்ப இலக்கம்: 303

Expenditure Head No: 303

3 වන මහල, මහලේකම් කාර්යාල ගොඩනැගිල්ල, මාලිගාවත්ත, කොළඹ 10

3ஆம் மாடி,செயலகக் கட்டிடம், மாளிகாவத்தை, கொழும்பு 10

3rd Floor, Secretariat Building, Maligawatta, Colombo 10

2023 ஆம் ஆண்டுக்கான வருடாந்த செயலாற்றுகை அறிக்கை
புடவைக் கைத்தொழில் திணைக்களம்

அத்தியாயம் 01 : நிறுவனத் தோற்றப்பாடு

1.1 அறிமுகம்

கைத்தறி புடவைக் கைத்தொழில் துறையின் மேம்பாட்டின் நிமித்தம் கொள்கை உருவாக்கத்திற்கு ஆதரவளித்தல் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை செயல்படுத்துதல்இ மேற்பார்வை செய்தல்இ மதிப்பீடு செய்தல் உட்பட அனைத்து கைத்தறி புடவைக் கைத்தொழில் நடவடிக்கைகளையும் முறைப்படுத்துதல்இ மேற்பார்வை செய்தல் மற்றும் ஒருங்கிணைத்தல் மற்றும் அது தொடர்பாக புடவைக் கைத்தொழில் பயிற்சி நிறுவனங்கள் மற்றும் வடிவமைப்பு நிலையங்கள் மூலம் கைத்தறி புடவைக் கைத்தொழில் துறைக்குத் தேவையான. அறிவு மற்றும் திறன் கொண்ட மனித வளத்தை உருவாக்குதல் மற்றும் அபிவிருத்தி செய்தல் என்பன புடவைக் கைத்தொழில் திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளன.

2023 ஆம் ஆண்டில் புடவைக் கைத்தொழில் திணைக்களத்தினால் கைத்தறி புடவைக் கைத்தொழிலின் மேம்பாட்டுக்காக மேற்கொள்ளப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் முன்னேற்றம் இந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

1.2 நிறுவனத்தின் நோக்கு, இலட்சியப் பணி, குறிக்கோள்கள்

நோக்கு

‘‘உள்நாட்டுத் தனித்துவம் மற்றும் கலாசாரத்திற்கு ஏற்றவகையிலும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சந்தைச் செயற்பாடுகளை வெற்றிகொள்ளக்கூடிய வகையிலும் கைத்தறி நெசவுத்தொழில் துறையில் ஆக்கபூர்வமானதும் போட்டித்தன்மைமிக்கதுமான துணி உற்பத்தியில் உற்பத்தியாளர்களை ஈடுபடுத்துதல்.’’

இலட்சியப் பணி

‘‘அரச கொள்கைச் சட்டகத்தினுள் கைத்தறி நெசவுத்தொழிலின் அபிவிருத்திக்குத் தேவையான கொள்கைகளை வகுத்தல், குறிப்பிட்ட கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான வழிகாட்டல்களை வழங்குதல், தேவைப்படும் சேவைகளையும் வசதிகளையும் வழங்குதல் மற்றும் நெறிப்படுத்துதல் மற்றும் இணைப்பாக்கத்தினூடாக கைத்தறி நெசவத்தொழில் துறையில் அளவுசார் மற்றும் தரம்சார் வளர்ச்சியை ஏற்படுத்துதல்.’’

நோக்கங்கள்

- கைத்தறி புடவைக் கைத்தொழில் துறையின் வளர்ச்சிக்கான கொள்கைகளை வகுப்பதில் உதவுதல்இசெயல்படுத்தல் மற்றும் மதிப்பீடு செய்தல்.
- அனைத்து கைத்தறி புடவைக் கைத்தொழில் நடவடிக்கைகளையும் முறைப்படுத்துதல்இமேற்பார்வை செய்தல் மற்றும் ஒருங்கிணைத்தல்.
- கைத்தறி புடவைக் கைத்தொழில் துறையின் வளர்ச்சிக்குத் தேவையான பயிற்சி பெற்ற மனித வளத்தை உருவாக்குதல்.

1.3 பணிகள்

1.3.1 கைத்தறி புடவைக் கைத்தொழில் துறையின் வளர்ச்சிக்குத் தேவையான நெசவு ஆலோசகர்களையும் பணியாட்டொகுதிகளையும் பயிற்றுவித்தல்.

1.3.2 துறைக்குத் தேவையான தொழில்முறை திறன்களைக் கொண்ட கைவினைஞர்களைப் பயிற்றுவித்தல்.

1.3.3 அபிவிருத்தி கைத்தறி புடவைக் கைத்தொழில் துறையில் தொழில்முயற்சி .மற்றும் சுய தொழில் மேம்பாட்டுக்காக நடவடிக்கை எடுத்தல்

1.3.4 தயாரிப்பு அபிவிருத்தியை நோக்கமாகக் கொண்ட நிகழ்ச்சித்திட்டங்களை உருவாக்குதல்.

- வடிவமைப்பு உருவாக்க நிகழ்ச்சித்திட்டங்கள்
- பயிற்றுவிப்பாளர்களை பயிற்றுவிக்கும் நிகழ்ச்சித் திட்டங்கள்
- தயாரிப்பு பல்வகைப்படுத்தல் நிகழ்ச்சித் திட்டங்கள்

1.3.5 கைத்தறி புடவைக் கைத்தொழில்துறை உற்பத்திகளை உள்நாட்டிலும் சர்வதேச அளவிலும் சந்தைப்படுத்துதலை ஊக்குவிக்க ஒருங்கிணைத்தல்.

1.3.6 கைத்தறி புடவைக் கைத்தொழில்துறை உற்பத்திகளை பிரபலப்படுத்தல்இ வடிவமைப்பு மேம்பாடு மற்றும் தர மேம்பாடு ஆகியவற்றை நோக்கமாகக் கொண்ட கண்காட்சிகள் மற்றும் போட்டிகளை நடத்துதல்.

1.3.7 கைத்தறி புடவைக் கைத்தொழில்துறையின் வளர்ச்சிக்கூத் தேவையான ஆராய்ச்சி மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள்.

1.3.8 மற்றும் தரம்சார் கைத்தறி புடவைக் கைத்தொழில்துறையின் அளவுசார் வளர்ச்சிக்கு புதிய தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்துவது தொடர்பான .நடவடிக்கைகளை மேற்கொள்ளல்

1.3.9 1980-1982 இல் நிறுவப்பட்ட புடவைக் கைத்தொழில் திணைக்களத்திற்குச் சொந்தமாகவிருந்த பத்து விசைத்தறி தொழில்முயற்சிகளில் பத்து ஆண்டுகளுக்கும் குறைவான சேவைக் காலத்தைக் கொண்டுள்ள 4166 இயந்திரத் தொழிலாளர்களுக்கு அவர்கள் உயிர்வாழும் வரை மாதாந்த கொடுப்பனவுகளைச் செலுத்தும் நடவடிக்கைகளை 2022 ஏப்ரல் மாதம் முதல் பன்முகப்படுத்தி பிரதேச செயலகங்கள் ஊடாக செலுத்துதல்

1.4 நிறுவனக் கட்டமைப்பு



1.5 திணைக்களத்தின் பிரதான பிரிவுகள்

- தாபனப் பிரிவு
- அபிவிருத்திப் பிரிவு
- கணக்குப் பிரிவு

1.6 திணைக்களத்தின் கீழுள்ள நிறுவனங்கள்

பின்வரும் நிறுவனங்கள் இத்திணைக்களத்தின் கீழ் தற்போது இயங்கிவருகின்றன.

i. ஆராய்ச்சி, பயிற்சி, வடிவமைப்பு மற்றும் சேவைகள் பிரிவு

1/280, காலி வீதி, கடுபெத்த, மொரட்டுவை.

ii. புடவைக் கைத்தொழில் பயிற்சி நிறுவனங்கள் மற்றும் வடிவமைப்பு பயிற்சி நிலையங்கள்

புடவைக் கைத்தொழில் திணைக்களத்தின் கீழ் புடவைக் 14 பயிற்சி நிலையங்களும் கைத்தொழில், வடிவமைப்பு பயிற்சி 02 .நிலையங்களும் இயங்குகின்றன

தொடர் இலக்கம்	நிறுவனம்	முகவரி
01	கைத்தறி நெசவுக் கைத்தொழில் பயிற்சி நிலையம் – கடுபெத்த	280/11/280, காலி வீதி, கடுபெத்த, மொரட்டுவை
02	கைத்தறி நெசவுக் கைத்தொழில் பயிற்சி நிலையம் – கொட்டல	கொட்டல, வேயங்கொடை
03	கைத்தறி நெசவுக் கைத்தொழில் பயிற்சி நிலையம் – போயகனே	போயகனே, குருணாகல்

04	கைத்தறி நெசவுக் கைத்தொழில் பயிற்சி நிலையம் பின்னவல -	பின்னவல, ரம்புக்கனை
05	கைத்தறி நெசவுக் கைத்தொழில் பயிற்சி நிலையம் – வடபுளுவ	அருப்பல வீதி, வடபுளுவ, கண்டி
06	கைத்தறி நெசவுக் கைத்தொழில் பயிற்சி நிலையம் – கெடபே	கெடபே, பேராதெணிய
07	கைத்தறி நெசவுக் கைத்தொழில் பயிற்சி நிலையம் – மாத்தளை	கொன்கஹமுல, பலாபத்வல, மாத்தளை
08	கைத்தறி நெசவுக் கைத்தொழில் பயிற்சி நிலையம் – மாத்தறை	ஹக்மன, மாத்தறை
09	கைத்தறி நெசவுக் கைத்தொழில் பயிற்சி நிலையம் கிரம -	மித்தெனிய வீதி, கிரம
10	கைத்தறி நெசவுக் கைத்தொழில் பயிற்சி நிலையம் – பண்டாரவளை	கிணிகம, பண்டாரவளை
11	கைத்தறி நெசவுக் கைத்தொழில் பயிற்சி நிலையம் தலாவ -	மிஹிரிகம, தலாவ
12	கைத்தறி நெசவுக் கைத்தொழில் பயிற்சி நிலையம் காலி -	கலேகான வீதி, கிங்தொட, காலி
13	கைத்தறி நெசவுக் கைத்தொழில் பயிற்சி நிலையம் – நல்லூர்	194, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்
14	கைத்தறி நெசவுக் கைத்தொழில் பயிற்சி நிலையம் – சம்மாந்துறை	சம்மாந்துறை
15	உயர் வடிவமைப்பு பயிற்சி நிலையம் – கடுபெத்த	1/280, காலி வீதி, கடுபெத்த, மொரட்டுவை
16	உயர் வடிவமைப்பு பயிற்சி நிலையம் – கெடபே	கெடபே, பேராதெணிய

அத்தியாயம் 02 : முன்னேற்றம் மற்றும் எதிர்கால நோக்கு

2.1 நிறுவனத்தின் முன்னேற்றம்

2.1.1 கைத்தறி புடவைக் கைத்தொழில் துறைக்கான புதிய கைவினைஞர்களைப் பயிற்றுவித்தல்.

- **புடவைக் கைத்தொழில் பயிற்சி நிறுவனங்களுக்கு மாணவர்களை ஆட்சேர்த்து பயிற்சி அளித்தல்.**

புடவைக் கைத்தொழில் திணைக்களத்தின் கீழ் இயங்கும் 14 புடவைக் கைத்தொழில் பயிற்சி நிறுவனங்களால் நடத்தப்படும் புடவைக் கைத்தொழில் பற்றிய ஆறு மாத அடிப்படைப் பயிற்சிப் பாடநெறி மற்றும் 13 மாத இறுதிச் சான்றிதழ் பாடநெறி மூலம் தொடர்புடைய பயிற்சி அளிக்கப்படுகிறது.

அதன்படிஇ 2023.'.2024 கல்வியாண்டுக்காக 88 மாணவர்களை இணைத்துக் கொள்வதற்கான நேர்முகப் பரீட்சை நடத்தப்பட்டது. தகைமைபெற்ற மாணவர்களுக்காக இப் பாடநெறிகள் 2023 மார்ச் 10 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டன.

2. பணியிடப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துதல்.

- **கைத்தறி புடவைக் கைத்தொழில் துறையில் ஈடுபடுபவர்களுக்கு குறுகிய கால பயிற்சிப் பாடநெறிகளை நடத்துதல்.**

கைத்தறி புடவைக் கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள பயிற்சியாளர்கள்இ தொழில்முயற்சியாளர் மற்றும் நெசவாளர்களின் திறன் மேம்பாட்டுக்கான புதிய நுட்பமுறைகள்இ வடிவமைப்பு எண்ணக்கருக்கள்இ வினைத்திறன்மிகு பயனுள்ள தயாரிப்பு மேம்பாட்டிற்கான வழிமுறைகள் உட்பட தொழில்துறையின் வளர்ச்சிக்குத் தேவையான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயலமர்வுகள் இதன் கீழ் ஏற்பாடு செய்யப்பட்டு செயல்படுத்தப்படுகிறது.

புடவைக் கைத்தொழில் திணைக்களத்தின் பணியாட்டொகுதிஇ மாகாண கைத்தொழில் திணைக்களங்களின் கீழ் பணிபுரியும் நெசவு ஆலோசகர்கள்இ கூட்டுறவுத் துறையில் புடவை கைத்தொழிலில் ஈடுபடுபவர்கள் மற்றும் தனியார் துறையில் கைத்தறி புடவைக் கைத்தொழில் துறையில் பணிபுரிபவர்களின் அறிவு மற்றும் திறன்களை மேம்படுத்தும் நோக்கில் 2023 ஆம் ஆண்டில் 323 பயிற்சிபெறுநர்களுக்கு 19 பயிற்சி நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

இந்தப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் கட்டுபெத்த கைத்தறி புடவைக் கைத்தோழில் பயிற்சி நிறுவன வளாகத்திலும் களப் பயிற்சிகளாகவும் நடத்தப்பட்டுள்ளன.

2023 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட பணியிட பயிற்சிப் பாடநெறிகள் பற்றிய தகவல்கள்

- **கடுபெத்த புடவைக் கைத்தொழில் பயிற்சி நிறுவனத்தில் நடத்தப்பட்ட பயிற்சிப் பாடநெறிகள்**

கட்டுபெத்த கைத்தொழில் பயிற்சி நிறுவனத்தில் 8 பயிற்சிப் பாடநெறிகள் நடத்தப்பட்டதோடு அதன் மூலம் 151 பயனாளிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.

தொ.இல	பாடநெறியின் பெயர்	நடைபெற்ற திகதி	பங்கேற்பாளர்களின் எண்ணிக்கை
1	நீள்ஜாலா வடிவமைப்பு	07.02.2023 முதல் 10.02.2023 வரை	24
2	நூல்களை வெள்ளையாக்குதல் மற்றும் சாயமிடல்	21.02.2023 முதல் 24.02.2023 வரை	12
3	தும்பர மாதிரி வடிவமைப்பு	19.04.2023 முதல் 21.04.2023 வரை	18
4	கெட்ச்கார்ட் வடிவமைப்பு	22.05.2023 முதல் 24.05.2023 வரை	21
5	கை இயந்திர தரைவிரிப்பு வடிவமைப்பு	26.06.2023 முதல் 28.06.2023 வரை	28
6	கம்பிளித் துவாலை நெய்தல்	11.07.2023 முதல் 14.07.2023 வரை	11
7	இயற்கை சாயங்களின் அடிப்படையில் நூல்களுக்கு சாயமிடுதல்	24.07.2023முதல் 26.07.2023 வரை	18
8	வண்ணக் கலவை	06.09.2023 முதல் 08.09.2023 வரை	19

- கைத்தறி புடவைக் கைத்தொழில்களில் சுயதொழில் செய்பவர்களுக்கு நடத்தப்பட்ட பயிற்சிப் பாடநெறிகள்
- 4 பயிற்சிப் பாடநெறிகள் நடத்தப்பட்டுள்ளதுடன் அதனூடாக 38 பயனாளிகள் பயிற்சி பெற்றுள்ளனர்.

தொ.இல	பாடநெறியின் பெயர்	நடைபெற்ற திகதி	பங்கேற்பாளர்களின் எண்ணிக்கை	நடைபெற்ற இடம்
1	பள்ளு வடிவமைப்பு	17.01.2023 முதல் 20.01.2023 வரை	13	கணேவத்த கைத்தறி புடவை கருத்திட்ட தளம்

2	மலர் வடிவமைப்பு	30.01.2023 முதல் 02.02.2023 வரை	07	மில்லவல கைத்தறி புடவை கருத்திட்ட தளம்
3	தரைவிரிப்பு தயாரிப்பு	26.07.2023 முதல் 28.07.2023 வரை	09	புத்பிட்டிய கைத்தறி புடவை கருத்திட்ட தளம்
4	நூல்களை வெள்ளையாக்குதல் மற்றும் சாயமிடல்	21.11.2023 முதல் 26.11.2023 வரை	09	மரதகஹமுல கருத்திட்ட தளம்

- **மாகாண புடவைக் கைத்தொழில் திணைக்களங்களுக்காக நடத்தப்பட்ட பயிற்சிப் பாடநெறிகள்**

7 பயிற்சிப் பாடநெறிகள் நடத்தப்பட்டுள்ளதோடு 134 பயனாளிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

தொ. இல	பாடநெறியின் பெயர்	நடைபெற்ற திகதி	பங்கேற்பாளர்களின் எண்ணிக்கை	நடைபெற்ற இடம்
1	பெதம்பிலி வடிவமைப்புகள்	28.03.2023 முதல் 04.04.2023 வரை	23	பண்டுலகம புடவைக் கைத்தொழில் நிலையம் (வட மத்திய மாகாணம்)
2	பள்ளு நெய்தல் வடிவமைப்பு	07.08.2023 முதல் 10.08.2023 வரை	17	அம்பாறை புடவைக் கைத்தொழில் நிறுவனம்
3	பள்ளு நெய்தல் வடிவமைப்பு (தமிழ் மொழி மூலம்)	14.08.2023 முதல் 17.08.2023 வரை	17	காரைதீவு புடவைக் கைத்தொழில் நிலையம் (வடக்கு மாகாணம்)
4	பள்ளு வடிவமைப்பு	11.09.2023 முதல் 15.09.2023 வரை	16	திருகோணமலை புடவைக் கைத்தொழில் நிலையம்
5	கம்பிளித் துவாலை வடிவமைப்பு	16.10.2023 முதல் 20.10.2023 வரை	18	யாழ்ப்பாண புடவைக் கைத்தொழில் நிலையம்
6	கோழிக் காலடி வடிவமைப்பு	11.09.2023 முதல் 15.09.2023 வரை	30	அம்பாறை புடவைக் கைத்தொழில் நிலையம்

7	டோபி வடிவமைப்பு பயிற்சி	13.11.2023 முதல் 24.11.2023 வரை	13	வவுனியா புடவைக் கைத்தொழில் நிலையம்

3. பரீட்சைகள் மற்றும் மதிப்பீட்டு நடவடிக்கைகள்

- **புடவைக் கைத்தொழில் பயிற்சிப் பாடநெறிகள் தொடர்பான பரீட்சைகள் மற்றும் மதிப்பீடுகள்**

புடவைக் கைத்தொழில் இறுதிச் சான்றிதழ் மற்றும் அடிப்படை பயிற்சி பாடநெறிகளுக்கான கோட்பாட்டு ரீதியான மற்றும் நடைமுறை ரீதியான மதிப்பீடுகளும் பரீட்சைகளும் 2023 மார்ச் 13-14-15 ஆம் திகதிகளில் நடத்தப்பட்டன. இதற்காக புடவைக் கைத்தொழில் பயிற்சி நிறுவனங்களில் இருந்து 89 மாணவர்களும் 67 வெளி விண்ணப்பதாரர்களும் தோற்றினர்.

பரீட்சை நிலையம்	**புடவைக் கைத்தொழில் பயிற்சி நிறுவனங்களின் மாணவர்களின் எண்ணிக்கை**	**வெளி விண்ணப்பதாரர்கள் எண்ணிக்கை**
கோட்டல	04	05
கட்டுபெத்த	04	04
கெட்டம்பே	08	02
கிரம	09	04
போயகனே	09	03
மாத்தளை	08	05
பண்டாரவளை	12	14
மாத்தறை	02	03
வட்டபுளுவ	08	06
பின்னவல	05	01
தலாவ	06	-
காலி	05	02
சம்மாந்துறை	07	13
நல்லூர்	02	05
மொத்தம்	**89**	**67**

கைத்தறி புடவைக் கைத்தொழில் துறையில் உயர் வடிவமைப்பு பயிற்சிப் பாடநெறியைப் பயில்வதற்காக 2022-ம் ஆண்டு இணைத்துக்கொள்ளப்பட்ட மாணவர்களுக்கு பாடநெறியின் முடிவில் நடத்தப்படும் பரீட்சை 2023 ஜூலை 17-18-19இ ஆம் திகதிகளில் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டது. அதற்காகஇ கெட்டம்பே வடிவமைப்பு பயிற்சி நிறுவனத்தில் 22 மாணவர்களும்இ கட்டுபெத்த வடிவமைப்பு பயிற்சி நிறுவனத்தைச் சேர்ந்த 13 மாணவர்களும் தோற்றியதோடுஇ கல்வியாண்டின் இறுதியில் பாடநெறிகளைப் பயின்று இறுதிச் சான்றிதழ் பரீட்சையில் தேர்ச்சி பெற்ற மற்றும் கைத்தறி புடவைக் கைத்தொழில் வடிவமைப்பு பற்றிய உயர் பயிற்சிச் சான்றிதழ் பரீட்சையில் தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கு 2023 ஆகஸ்ட் 07 ஆம் திகதி சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

2023 ஆம் ஆண்டு கைத்தறி புடவைக் கைத்தொழில் உயர் வடிவமைப்பு பயிற்சிப் பாடநெறியைப் பயில்வதற்காக 2023 ஜூலை 24 ஆம் திகதி கெட்டம்பே வடிவமைப்பு பயிற்சி நிறுவனத்தில் இருந்து 05 மாணவர்களும்இ கட்டுபெத்த வடிவமைப்பு பயிற்சி நிறுவனத்தில் இருந்து 08 மாணவர்களும் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர்.

2.1.4 கைத்தறி புடவைக் கைத்தொழில் கருத்திட்டங்களை ஆரம்பித்தல்.

- **கிராம அளவிலான கைத்தறி புடவைக் கைத்தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களை பொருளாதார ரீதியாகவும்இ சமூக ரீதியாகவும் வலுவூட்டும் வகையில் இக் கருத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.**

கிராமிய மட்டத்தில் கைத்தறி புடவைக் கைத்தொழிலை மிகவும் பயனுள்ள வாழ்வாதாரமாக விரிவுபடுத்தும் நோக்கில்இ புடவைக் கைத்தொழில் திணைக்களம் நாட்டின் பல்வேறு மாவட்டங்களை உள்ளடங்கும் வகையில் கைத்தறி புடவைக் கைத்தொழில் கருத்திட்டங்களைத் தொடங்கியுள்ளது.
அந்தந்தப் பகுதிகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட பயனாளிகளுக்கு கைத்தறி புடவைக் கைத்தொழில் குறித்த ஆறு மாத பயிற்சி அளித்த பின்னர்இ கைத்தொழிலை ஆரம்பிக்கத் தேவையான அடிப்படை உபகரணங்கள்இ மூலப்பொருட்கள் வழங்கப்பட்டு பின்னர் பயிற்சி பெற்ற பயனாளிகள் தொழில் அமர்த்தப்படுவார்கள். அக் கருத்திட்டங்களுக்குத் தேவையான மேலதிக பயிற்சி மற்றும் பின்தொடர் கண்காணிப்பு திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படும்.
அதன்படிஇ 2023 ஆம் ஆண்டில் அடையாளம் காணப்பட்ட கருத்திட்ட முன்மொழிவுகளில்இ அந்த ஆண்டில் தொடங்கப்பட்ட கருத்திட்டங்களின் தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

தொடர் இலக்கம்	திட்டத்தின் பெயர்	பயிற்சி பெற்றவர்களின் எண்ணிக்கை
1.	ஹங்கவத்த கைத்தறி புடவை கருத்திட்டம்	13
2.	மெட்டியக்கம கைத்தறி புடவை கருத்திட்டம்	05
3.	மணிப்பே கைத்தறி புடவை கருத்திட்டம்	10
4.	தமுனுகொல்ல கைத்தறி புடவை கருத்திட்டம்	02
5.	ரவாஎல கைத்தறி புடவை கருத்திட்டம்	14
6.	முதுன்கொட்டுவ மேற்கு கைத்தறி புடவை கருத்திட்டம்	06
7.	அமுனுகொட கைத்தறி புடவை கருத்திட்டம்	07
8.	அகுகம்மன கைத்தறி புடவை கருத்திட்டம்	07
9.	அமுனுகும்புர கைத்தறி புடவை கருத்திட்டம்	11
பயனாளிகளின் மொத்த எண்ணிக்கை		**75**

2.1.5 தேசிய கைத்தறி புடவைப் போட்டி கண்காட்சி மற்றும் விருது வழங்கும் விழா

- **இது கைத்தறி புடவைக் கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள கைவினைஞர்களை மதிப்பீடு செய்தல் மற்றும் சந்தையை மேம்படுத்தும் நோக்கில் நடத்தப்படுகிறது.**

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சந்தைகளை இலக்காகக் கொண்டு கைத்தறி புடவைக் கைத்தொழில் தயாரிப்புகளை மேற்கொள்ளும் கைத்தறி புடவைக் கைத்தொழில் கைவினைஞர்களின் திறன்கள் மற்றும் ஆற்றல்களை பாராட்டவும் துறையில் ஈடுபட்டுள்ளவர்களை ஊக்குவிக்கவும் ஆண்டுதோறும் நடத்தப்படும் தேசிய கைத்தறி புடவைப் போட்டியின் இறுதி முடிவுகளைத் தீர்மானிக்கும் நடவடிக்கைகள் 2023 அக்டோபர் 27 ஆம் திகதி கட்டுபெத்த புடவைக் கைத்தொழில் பயிற்சி நிறுவனத்தில் இடம்பெற்றன. அப்போட்டியுடன் தொடர்புடைய 128 கைவினைஞர்களுக்கான சான்றிதழ் வழங்குவதற்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு 2023 டிசம்பர் 06 ஆம் திகதி பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டப வளாகத்தில் நடைபெற்றது.

2.1.6 கைத்தறி புடவை விற்பனைச் சந்தை

சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தறி புடவை விற்பனைச் சந்தை 2023 டிசம்பர் 2இ 3 மற்றும் 4 ஆம் திகதிகளில் 40 கைத்தறி புடவை உற்பத்தியாளர்களுக்கு விற்பனை வசதிகளை வழங்கி பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தின் திறந்தவெளி வளாகத்தில் நடத்தப்பட்டது. இதன்போது கைத்தொழிலாளர்கள் திணைக்களத்திற்கு வழங்கிய வருமான அறிக்கைகளின் படிஇ பங்குபற்றிய அனைத்து கைத்தொழிலாளர்களும் 8.1 மில்லியன் ரூபா வருமானத்தைப் பெற்றுள்ளனர்.

2.1.7 RPL (பூரண தகைமையின் கீழ் நடாத்தப்படும் முறை) முறையின் கீழ் NVQ சான்றிதழ்களை வழங்குவதற்கான வசதிகளை வழங்குதல்

மாகாண கைத்தொழில் திணைக்களத்தின் கீழ் பணிபுரியும் கைத்தொழிலார்களுக்கு RPL முறையில் NVQ 4 ஐ வழங்குவதற்கு வசதி வழங்கும் ஒரு மையமாக செயல்படுவதோடுஇ 2023 ஆம் ஆண்டின் இறுதிக்குள்இ 110 பயனாளிகளுக்கு ஏஏஞ 4 சான்றிதழ்கள் வழங்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கபட்டுள்ளது.

மாகாணம்	பயனாளிகளின் எண்ணிக்கை
சப்ரகமுவ மாகாணம்	40 நெசவு ஆலோசகர்கள்
தென் மாகாணம்	8 நெசவு ஆலோசகர்கள்
ஊவா மாகாணம்	7 நெசவு ஆலோசகர்கள்
மத்திய மாகாணம்	20 நெசவு ஆலோசகர்கள்
மேல் மாகாணம்	35 நெசவு ஆலோசகர்கள்

2.1.8 துறைக்கு புதிய வடிவமைப்புகளையும் தயாரிப்புகளையும் அறிமுகப்படுத்தல்

- மேம்படுத்தப்பட்ட நூல் சுற்றும் இயந்திரம் புத்தாக்கமாக உருவாக்கப்பட்டதோடு அந்த இயந்திரத்தின் மூலம் மேலும் 22 இயந்திரங்கள் இதுவரை உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. இது எதிர்காலத்தில் கைத்தொழிலாளர்களுக்கு அறிமுகப்படுத்தப்படும்.
- சந்தையில் காணப்படும் மூலப் பொருட்களின் சிக்கலுக்குத் தீர்வாக 10 செலவுச் சிக்கன ஆக்கங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

2.1.9 தொழில்முயற்சி அபிவிருத்தி பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்

புடவைக் கைத்தொழில் திணைக்களத்தின் கீழ் உள்ள பயிற்சி நிறுவனங்களில் கல்வி பயின்று தற்போது தொழில்துறையில் ஈடுபட்டு வரும் 20 இளம் மாணவர்களை தொழில்முயற்சியாளர்களாக மாற்றும் வேலைத்திட்டம் 2023 ஆம் ஆண்டு நடைமுறைப்படுத்தப்பட்டதோடு அவர்களின் அறிவு மற்றும் திறன்களை மேலும் மேம்படுத்தும் நோக்குடன் பின்வரும் 2 விசேட பாடநெறிகளும் வெற்றிகரமாக நடத்தப்பட்டன.

1. **ஆடைகளுக்கான தொகுதி வடிவமைப்பு**
    - இலங்கை புடவை மற்றும் ஆடைகள் நிறுவனத்துடன் **(ளுடுஐவுயு)** ஒருங்கினைந்து இந்த பாடநெறி நடத்தப்பட்டது.

2. **உயர் வடிவமைப்பு பயிற்சிப் பாடநெறி -** ““வுசயனைவைழையெட ிசழபசயஅஅந ழடெ னுநளபைெ ஐைெழஎயவழைெ ைெ ர்யனெடழழஅ : டீசனைபபைெ வாந புயி டீநவறநநெ வுசநனெ யனெ வுசயனவைழைெ”

- மொரட்டுவ பல்கலைக்கழகத்தின் நெசவு மற்றும் ஆடை பொறியியல் துறையுடன் இணைந்து நடத்தப்பட்டது.

2.2 நிறுவனத்தின் எதிர்கால நோக்கு

- பிரதேச செயலக மட்டத்தில் 06 கைத்தறி புடவை உற்பத்தி கிராமக் கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.
- கைத்தறி புடவைக் கைத்தொழில் சார்ந்த 20 பயிற்சிப் பாடநெறிகளை நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.
- புடவைக் கைத்தொழில் கண்காட்சி விற்பனைச் சந்தை மற்றும் விருது வழங்கும் விழாவிற்கு ஒருங்கமைவாக நடத்தப்படும் மாகாண கைத்தறி புடவைக் கைத்தொழில் போட்டி மற்றும் தேசிய போட்டியை நடத்துதல்.
- நெசவுப் பாடசாலை இறுதிச் சான்றிதழ் பரீட்சை மற்றும் வடிவமைப்புப் பயிற்சிப் பரீட்சை நடைபெற உள்ளது.
- திணைக்களத்தின் 14 கைத்தறி புடவைக் கைத்தொழில் பாடசாலைகளில் 04 பாடசாலைகளை மேலும் கவர்ச்சிகரமானதாக மாற்றும் வகையில் நவீனமயமாக்கல்.
- கைத்தறி புடவைக் கைத்தொழில் துறையின் சுயதொழில் மற்றும் தொழில்முயற்சி மேம்பாட்டுக்குத் தேவையான நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துதல்.
- 1980-1982 ஆம் ஆண்டு காலப்பபுதியில்இ இந்தத் திணைக்களத்துக்குச் சொந்தமான பத்து விசைத்தறி தொழில்முயற்சிகளை தனியாருக்கு மாற்றியபோதுஇ பத்து ஆண்டுகளுக்கும் குறைவான சேவையைக் கொண்ட 4166 இயந்திர இயக்குநர்களுக்கு வாழ்நாள் முழுவதும் மாதாந்த கொடுப்பனவொன்றை செலுத்தும் நடவடிக்கைகளை மேலும் முறைசார் மற்றும் துரிதப்படுத்தும் நோக்கத்துடன் பரவலாக்கப்பட்டு அவை பிரதேச செயலகங்கள் ஊடாக செலுத்தப்பட்டு வருகின்றன.
- திணைக்களத்தின் அனைத்து ஊழியர்களின் அறிவுஇ திறன் மற்றும் மனோபாவத்தை மேம்படுத்த ஆற்றல் விருத்தி பயிற்சிச் செயலமர்வுகளை நடத்துதல்.
- 14 பாடசாலைகள் மற்றும் 2 வடிவமைப்பு பயிற்சி பாடசாலைகளின் மாணவர்களுக்கு தலைமைத்துவ பயிற்சிச் செயலமர்வுகளை நடத்துதல்.

2.3 சவால்கள்

- போதிய பணியாட்டொகுதி இன்மை.
- போதிய இடவசதிகளுடன்கூடிய பணியிடம் இல்லாமை
- திணைக்களத்தில் அத்தியாவசிய பதவிகளில் வெற்றிடங்கள் காணப்படுகின்றமை.
- திணைக்களத்தின் அத்தியாவசியப் பணிகளுக்கு அங்கீகரிக்கப்பட்ட பதவிகள் இல்லாமை.
- கைத்தறி புடவைக் கைத்தொழிலுக்குத் தேவையான மூலப்பொருட்களின் விலை நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றமை.
- கைத்தறி உற்பத்திப் பொருட்களுக்கான போதிய சந்தை வாய்ப்புகளை கைப்பற்றுவதற்கான அறிவு மற்றும் வாய்ப்புகள் இல்லாமை.

- கைத்தறி புடவை உற்பத்திகளுக்கு பெறுமதி சேர்க்கப்படாமை மற்றும் வெளிநாட்டு சந்தையை இலக்காகக் கொள்ளாமை.

2.4 நிறுவனத் தலைவரின் கையொப்பம்



பெயர்: யூ.வீ.எஸ். சேனானி செனெவிரத்ன
பதவி: பணிப்பாளர்

அத்தியாயம் 03:ஒட்டுமொத்த நிதி செயலாற்றுகை

3.1 நிதி செயலாற்றுகை அறிக்கை

வரவு செலவு (நடப்பு வருடம்)		குறிப்பு	உண்மையான	
			நடப்பு வருடம் ரூ.ச	கடந்த வருடம் ரூ.ச
-	**வருமான வரவுகள்**		-	-
-	வருமான வரி	1	-	-
-	உள்நாட்டு பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான வரிகள்	2	-	-
-	சர்வதேச வர்த்தகத்தின் மீதான வரிகள்	3	-	-
-	வரி அல்லாத வருமானம் மற்றும் ஏனைய	4	-	-
-	**மொத்த வருமான வரவுகள் (அ)**		-	-
-	**வருமான அல்லாத வரவுகள்**		-	-
-	திறைசேரி கட்டுநிதி		116,717,000.00	198,740,000.00
-	வைப்புகள்		499,579.00	1,542,569.00
-	முற்பண கணக்குகள்		6,366,570.00	5,552,804.00
-	பிற பிரதான பேரேட்டுக் கணக்கு வரவுகள்		-	-
-	**மொத்த வருமானம் அல்லாத வரவுகள் (ஆ)**		**123,583,149.00**	**205,835,373.00**
-	**மொத்த வருமான வரவுகள் மற்றும் வருமானம் அல்லாத வரவுகள் இ = (அ) + (ஆ)**		**123,583,149.00**	**205,835,373.00**

வரவு செலவு (நடப்பு வருடம்)		குறிப்பு	உண்மையான		
			நடப்பு வருடம் ரூ.ச		கடந்த வருடம் ரூ.ச
-	**திறைசேரிக்கான பணம் அனுப்பல்கள் (ஈ)**		**1,200,000.00**		**-**
-	**நிகர வருமான வரவுகள் மற்றும் வருமானம் அல்லாத வரவுகள் உ = (இ) – (ஈ)**		**122,383,149.00**		**205,835,373.00**
-	**கழிக்கப்பட்டது: செலவுகள்**		-		-
-	**மீண்டெழும் செலவுகள்**		-		-
82, 700,000	வேதனங்கள், சம்பளம் மற்றும் பிற ஊழியர் அனுகூலங்கள்	5	70,068,156.00		74,754,339.00
27.900,000	ஏனைய பொருட்கள் மற்றும் சேவைகள்	6	23,415,183.00		18,973,472.00
300,400,000	நிவாரணங்கள், சலுகைகள், கொடைகள் மற்றும் மாற்றல்கள்	7	253,780,653.00		215,696,318.00
-	வட்டி செலுத்துதல்கள்	8	-		-
-	ஏனைய மீண்டெழும் செலவுகள்	9	-		-
411,000,000	**மொத்த மீண்டெழும் செலவுகள் (ஊ)**		**347,263,991.00**		**309,424,129.00**
	மூலதன செலவுகள்				
8,700,000	மூலதன சொத்துக்களின் மறுசீரமைப்பு மற்றும் மேம்பாடு	10	7,949,094.00		1,015,963.00
300,000	மூலதன சொத்துக்களை கையகப்படுத்துதல்	11	-		105,800.00
-	மூலதன மாற்றல்கள்	12	-		-

வரவு செலவு (நடப்பு வருடம்)		குறிப்பு	உண்மையான		
			நடப்பு வருடம் ரூ.ச		கடந்த வருடம் ரூ.ச
-	நிதி சொத்துக்களை கையகப்படுத்துதல்	13	-		-
-	ஆற்றல் விருத்தி	14			-
50,000,000	ஏனைய மூலதனச் செலவுகள்	15	27,448,614.00		29,958,071.00
59,000,000	**மொத்த மூலதனச் செலவுகள் (எ)**		**35,397,708.00**		**31,079,834.00**
	வைப்புத்தொகை செலுத்தல்		257,180.00		5,016,846.00
	முற்பணம் செலுதத்தல்		6,333,064.00		5,258,228.00
	ஏனைய பிரதான பேரேட்டுக் கணக்கு செலுத்துதல்		-		-
	பிரதான பேரேட்டு செலவுகள் (ஏ)		6,590,244.00		10,275,074.00
	மொத்தச் செலவு ஐ = (ஊ + எ + ஏ)		**389,251,943.00**		**350,779,037.00**
470,000,000	**டிசம்பர் 31 ஆம் திகதியில் கட்டுநிதி நிலுவை ஓ = (உ-ஐ**		**(266,868,794.00)**		**(144,943,664.00)**
	கட்டுநிதி இணக்க அறிக்கையின்படி நிலுவை		**(267,097,794.00)**		**-144,943,664.00**
	டிசம்பர் 31 ஆம் திகதியில் கட்டுநிதி நிலுவை		**(229,000.00)**		**(144,943,664.00)**

3.2 நிதி நிலை பற்றிய கூற்று

ஏசீஏ -பீ

2023 டிசம்பர் 31 இல் உள்ளவாறான
நிதி நிலைமைக் கூற்று

	குறிப்பு	உண்மை நிலை 2023 ரூபா	2022 ரூபா
நிதி சொத்துக்கள் அற்றது			
ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரணம்	ஏசீஏ-6	268,815,527	268,815,527
நிதி சொத்துக்கள்			
முற்பணக் கணக்குகள்	ஏசீஏ-5/5ஏ	19,167,102	19,200,608
காசு மற்றும் காசுக்குச் சமனானவை	ஏசீஏ-3	229,000	-
மொத்த சொத்துக்கள்		288,211,629	288,016,135
தேறிய சொத்துக்கள் / உரிமைப் பங்கு			
திறைசேரிக்கு தேறிய சொத்துக்கள்		19,035,003	19,081,908
ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரண ஒதுக்கம்			
வாடகை மற்றும் பணி முற்பண ஒதுக்கம்	ஏசீஏ-5பீ	268,815,527	268,815,527
நடைமுறைப் பொறுப்புக்கள்			
வைப்புக் கணக்குகள்	ஏசீஏ-4	361,099	118,700
தீர்க்கப்படாத பணிமுற்பண மீதி	ஏசீஏ-3		-
மொத்தப் பொறுப்புக்கள்		288,211,629	288,016,135

பக்க இலக்கம் 01 முதல் 39 வரை ஏசீஏ 1 முதல் ஏசீஏ 7 வரையான மாதிரிப் படிவங்களின் மூலம் சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குத் தகவல்கள் மற்றும் குறிப்புகளின்/பின்னிணைப்புகளின் பக்க இலக்கம்I முதல் XIV வரை உள்ளடங்கியுள்ள ஏனைய கணக்குக் குறிப்புகளின் விபரமும் இந்த இறுதிக் கணக்குகளில் உள்ளடங்கிய பகுதியாகும். இந்த நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு இணங்கியதாக மேற்கொள்ளப்பட்டுள்ள அதேவேளையில் இங்கு நிதிக்கூற்றுக்களின் குறிப்புகளின் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளவாறு, மிகவும் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அதனால் மேலேயுள்ள இறுதிக் கணக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைகள், அது தொடர்பான கணக்குக் குறிப்புகள் மற்றும் ஏனைய கணக்குத் தகவல்கள் திறைசேரிப் புத்தகங்களுடன் சீராக்கம் செய்யப்பட்டுள்ளது என்பதையும் அவை அந்தத் தொகைகளுடன் உடன்படுகின்றது என்பதையும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

நிதி நிருவாகத்திற்காக வினைத்திறன்மிக்க உள்ளக நிருவாகத் தொகுதியொன்று அறிக்கையிடும் நிறுவனத்தில் காணப்படுகின்றது எனவும் நிதி நிருவாகத்திற்காக உள்ளக நிருவாகத் தொகுதியின் செயற்திறனை மேற்பார்வை செய்வதற்கும் அதற்கு அமைவாக அந்தத் தொகுதியை வினைத்திறனுடன் நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையானவாறு மாற்றங்களை மேற்கொள்வதற்கும் அடிக்கடி மீளாய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றது எனவும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்
பெயர்:
பதவி :
திகதி : 2023/03/06

கணக்கீட்டு உத்தியோகத்தர்
பெயர்:
பதவி :
திகதி : 2024/03/06

U.V.S. Senani Seneviratne
Director
Department of Textile Industry
3rd Floor, Secretariat Building,
Maligawatta, Colombo 10.

பிரதான நிதி உத்தியோகத்தர்/ பிரதான கணக்காளர் பணிப்பாளர்(நிதி)/ஆணையாளர்(நிதி)
பெயர் : 2024/02/06
திகதி :

H. G. Nandani
Accountant
Department of Textile Industry
3rd Floor,
Secretariat Bulding,
Maligawatta, Colombo 10.

J.M. Thilaka Jayasundara
Secretary
Ministry of Industries
73/1, Galle Road, Colombo 03.

2

3.3 காசுப் பாய்ச்சல் கூற்று

2023 டிசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்று

	உண்மையான	
	நடப்பு வருடம் **ரூ.ச.**	**கடந்த வருடம்** **ரூ.ச.**
தொழிற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்து கிடைத்த காசுப் பாய்ச்சல்கள்		
மொத்த வரி வரவுகள்	-	-
கட்டணங்கள், மிகைகள், தண்டப் பணம், மற்றும் உரிமங்கள்	-	-
இலாபம்	-	-
வருமானம் அல்லாத வரவுகள்	-	-
ஏனைய வருமானத் தலைப்புகளின் சார்பாக சேகரிக்கப்பட்ட வருமானம்	5,900,551.00	6,761,297.00
கட்டுநிதி வரவுகள்	116,717,000.00	198,740,000.00
முற்பண அறவிடல்	5,216,810.00	5,443,134.00
வைப்பு வரவுகள்	499,579.00	1,542,569.00
தொழிற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்து கிடைத்த மொத்த காசுப் பாய்ச்சல்கள்(அ)	**128,333,940.00**	**212,487,000.00**
கழிக்கப்பட்டது-பணச் செலவுகள்:		
பணியாளர்களின் சம்பளம் மற்றும் தொழிற்பாட்டு செலவுகள்	92,385,868.00	93,485,381.00

நிவாரணங்கள் மற்றும் மாற்றல்கள்	233,870.00	72,016,338.00
ஏனைய செலவுத் தலைப்புகளுக்காக உறப்பட்ட செலவுகள்	-	7,606,303.00
திறைசேரிக்கு தீர்க்கப்பட்ட கட்டுநிதி	1,200,000.00	-
முற்பணம் செலுத்துதல்	6,333,064.00	5,258,228.00
வைப்புத்தொகை செலுத்துதல்	257,180.00	5,016,846.00
தொழிற்பாட்டு நடவடிக்கைகளுக்கு செலவிடப்பட்ட காசுப் பாய்ச்சல் (ஆ)	**100,409,982.00**	**183,383,096.00**
தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து கிடைத்த நிகர காசுப் பாய்ச்சல் (இ)=(அ)-(ஆ)	**27,923,958.00**	**29,103,904.00**
முதலீட்டு நடவடிக்கைகளால் கிடைத்த காசுப் பாய்ச்சல்கள்		
வட்டி	-	-
பங்கிலாபம்	-	-
உரித்து நீங்கும் ஏற்பாடுகள் மற்றும் பௌதீக சொத்துக்களின் விற்பனை	-	-
முற்பண அறவீடு	-	-
முதலீட்டு நடவடிக்கைகளில் இருந்து கிடைத்த காசுப் பாய்ச்சல் (ஈ)		-
கழிக்கப்பட்டது-பணச் செலவு;		
மூலதன செலவு	**27,694,958.00**	**29,103,904.00**

முதலீட்டு நடவடிக்கைகளுக்காக செலவிடப்பட்ட மொத்த காசுப் பாய்ச்சல் (உ)	27,694,958.00	29,103,904.00
முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து கிடைத்த நிகர காசுப் பாய்ச்சல் (ஊ)=(ஈ)-(உ)	(27,694,958.00)	(29,103,904.00)
தொழிற்பாட்டு மற்றும் முதலீட்டு நடவடிக்கைகளில் இருந்து கிடைத்த நிகர காசுப் பாய்ச்சல் (எ)=(இ)+(ஊ)	228,999.55	
<u>நிதி நடவடிக்கைகளில் இருந்து கிடைத்த காசுப்பாய்ச்சல்</u>		
உள்நாட்டுக் கடன்கள்	-	-
வெளிநாட்டுக் கடன்கள்	-	-
கொடை வரவுகள்	-	-
வைப்பு வரவுகள்	-	-
நிதி நடவடிக்கைகளில் இருந்து கிடைத்த மொத்த காசுப் பாய்ச்சல் (ஏ)	-	-
<u>கழிக்கப்பட்டது-பணச் செலவு;</u>		
உள்நாட்டு கடன் திருப்பிச் செலுத்துதல்	-	-
வெளிநாட்டு கடன் திருப்பிச் செலுத்துதல்	-	-
நிதி நடவடிக்கைகளுக்காக செலவிடப்பட்ட மொத்த காசுப் பாய்ச்சல் (ஐ)	-	-
நிதி நடவடிக்கைகளில்	-	-

இருந்து கிடைத்த காசுப் பாய்ச்சல் (ஒ)=(எ)-(ஐ)		
நிதியின் நிகர மாற்றங்கள் (ஓ)=(எ)-(ஒ)	229,000.00	
ஜனவரி 01 ஆம் திகதியில் ஆரம்ப நிலுவை	-	-
டிசம்பர் 31 ஆம் திகதியில் இறுதி நிலுவை	229,000.00	-

3.4 நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

1. அறிக்கையிடல் காலப்பகுதி

2022 சனவரி 01தொடக்கம் டிசெம்பர் 31ஆம் திகதி வரையிலான காணப்பகுதி இந்த நிதிக்கூற்றுக்களுக்கான அறிக்கையிடல் காலப்பகுதியாக அமைகின்றது.

2. அளவீட்டின் அடிப்படை

நிதிக் கூற்றுக்கள் வரலாற்றுக் கிரய அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளதோடு சில சொத்துக்களுக்கான வரலாற்றுக் கிரயமானது மீள் மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதிக்கு முன்னேற்றப்பட்டுள்ளது. வேறுவகையில் காட்டப்படாதுள்ளபோது கணக்குத் தயாரிப்புகள் மேம்படுத்தப்பட்ட அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றன.
நிதிக் கூற்றுக்களானவை இலங்கை நாணயத்தில் அண்மித்த ரூபாவுக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

3. வருமானம் இனங்காணப்படுதல்

பரிமற்று மற்றும் பரிமாற்று அல்லாத வருமானங்கள் அவை கிடைக்கப்பட வேண்டிய கால எல்லைகளைப் புறக்கணித்து பணம் கிடைக்கப்படும் காணப்பகுதியில் வருமானமாக இனங்காணப்படுகின்றன.

4. ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களை இனங்காணுதல் மற்றும் அளவிடுதல்

சொத்தின் எதிர்கால பொருளாதார அனுகூலங்கள் நிறுவனத்திற்குக் கிடைக்கும் என்பதற்கான உறுதிப்பாடு காணப்படுகின்றபோது மற்றும் அச்சொத்துக்களை நம்பகமான முறையில் அளவிட முடியுமாக இருக்குமாயின் அச்சொத்துக்கள் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களாக இனங்காணப்படும்.
ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் என்பன கிரயத்தில் இனங்காணப்படுவதோடு கிரய மாதிரி ஏற்புடையதாக அமையாத சந்தர்ப்பங்களில் மீள் மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதி பயன்படுத்தப்படும்.

5. ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களுக்கான ஒதுக்கம்

இந்த ஒதுக்கக் கணக்கு ஆனது ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் ஒத்த கணக்காகும்.

6. காசும் காசுக்குச் சமமானவைகளும்

2023 டிசெம்பர் 31ஆம் திகதியில் கையிருப்பு உள்நாட்டு புழக்க நாணயத் தாள்கள் மற்றும் நாணயங்கள் என்பன காசும் காசுக்குச் சமமானவைகளுமாகும்.

3.5 வருமான சேகரிப்பு செயலாற்றுகை

வருமானக் குறியீடு	வருமானக் குறியீட்டின் விபரம்	வருமான மதிப்பீடு		வசூலித்த வருமானம்	
		ஆரம்ப மதிப்பீடு	இறுதி மதிப்பீடு	அளவு (ரூ.)	இறுதி வருமான மதிப்பீட்டின் % மாக
2002.01.00 2002.01.01	வாடகை அரச கட்டிடங்களின் வாடகை	800,000.00	800,000.00	654,716.29	
2002.02.00 2002.02.99	வட்டி	700,000.00	700,000.00	716,279.83	
2003.99.00	ஏனைய வரவுகள்	-	-	1,737,984.84	
2004.01.00 2004.01.00	சமூக பாதுகாப்பு பங்களிப்புகள் மத்திய அரசாங்கம்	-	-	279,157,0.47	

3.6 மேற்கொள்ளப்பட்ட ஒதுக்கீடுகளை பயன்படுத்துவதன் செயல்திறன்

ஒதுக்கீட்டு வகை	மேற்கொள்ளப்பட்ட ஒதுக்கீடுகள்		உண்மையான செலவு	பயன்படுத்தப்பட்ட ஒதுக்கீடு, இறுதி ஒதுக்கீட்டின் % ஆக
	ஆரம்ப ஒதுக்கீடு	இறுதி ஒதுக்கீடு		
மீண்டெழும்	411,000,000.00	411,000,000.00	347,263,991.00	84.5%
மூலதன	59,000,000.00	59,000,000.00	35,397,708.00	60%

3.7 நிபி..208 இன்படி, ஏனைய அமைச்சுக்கள்/திணைக்களங்களின் பிரதிநிதியாக இந்த திணைக்களத்திற்கு/மாவட்ட செயலகத்திற்கு/மாகாண சபைக்கு வழங்கப்பட்ட ஏற்பாடுகள்

தொ.இ.	ஒதுக்கீடுகள் கிடைத்த அமைச்சு/திணைக்களம்	ஒதுக்கீட்டின் நோக்கம்	ஒதுக்கீடுகள்		உண்மையான விலை ரூ.	பயன்படுத்தப்பட்ட ஒதுக்கீடுகள்,வழங்கப்பட்ட இறுதி ஒதுக்கீடுகளின் %மாக
			ஆரம்ப ஒதுக்கீடுகள் ரூ.	இறுதி ஒதுக்கீடுகள் ரூ.		
130	மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு	பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான கொடுப்பனவுகளை மேற்கொள்ளல்				
149	கைத்தொழில் அமைச்சு	தேசிய பயிலுநர் மற்றும் தொழில்நுட்ப பயிற்சி அதிகார சபை– NVQ சான்றிதழ்களைப் பெறுதல்				
253	ஓய்வூதியத் திணைக்களம்	முற்பண கடன்களைத் தீர்த்தல்	3,600,000.00	3,600,000.00	3,600,000.00	100%

3.8 நிதியல்லா சொத்துக்களின் அறிக்கையிடலுக்கான செயல்திறன

சொத்துக்கள் குறியீடு	குறியீட்டின் விபரம்	2022.12.31ஆம் திகதியில் பொருட் கணிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் நிலுவை	2022.12.31 ஆம் திகதியில் நிதி நிலை அறிக்கையின் பிரகாரம் நிலுவை	எதிர்காலத்தில் கணக்கிடப்படவுள்ள	முன்னேற்றம் % மாக அறிக்கையிடப்படுதல்
9151	கட்டிடங்களும் கட்டமைப்புகளும்	127,979,125.00	127,979,125.00	-	100%
9152	இயந்திர சாதனங்கள்	41,277,552.00	41,277,552.00	-	100%
9153	காணி	99,561,850.00	99,561,850.00	-	100%
9154	அருவச் சொத்துக்கள்	-	-	-	-
9155	உயிரியல் சொத்துக்கள்	-	-	-	-

3.9 கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

எனது இலக்கம்: ரீஏசீ/ஏ/டீரீஜ/எப்எஸ்/23/38 திகதி: 2024 யூன் 25

பணிப்பாளர்,

புடவைக் கைத்தொழில் திணைக்களம்.

தலைப்பு 303 – புடவைக் கைத்தொழில் திணைக்களத்தின் 2023 டிசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்கள் பற்றிய 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரமான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்க அறிக்கை

----

1. நிதிக் கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ளஅபிப்பிராயம்

தலைப்பு 303 - புடவைக் கைத்தொழில் திணைக்களத்தின் 2023 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் பொருண்மையான கணக்கீட்டுக் கொள்கைகளுக்கான தகவல்களையும் உள்ளடக்கிய நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகளைக் கொண்டமைந்த 2023 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினது ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் புடவைக் கைத்தொழில் திணைக்களத்திற்குச் சமர்ப்பிக்கப்படுகின்ற இந்நிதிக் கூற்றுக்கள் தொடர்பான கருத்துரைகள் மற்றும் அவதானிப்புகள் இவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளன. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கை உரிய காலத்தில் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6ஆம் பகுதியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து 2023 டிசெம்பர் 31 ஆம் திகதியில் புடவைக் கைத்தொழில் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6ஆம் பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழி செய்யப்படுகின்றது. இலங்கைக் கணக்காய்வு நியமங்களுக்கு அமைவாக எனது காணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. குறிப்பிட்ட கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பானது இந்த அறிக்கையின் நிதிக் கூற்றுக்களுக்கான கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு எனும் பகுதியில் மேலதிகமாகவும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படையை

வழங்கும் பொருட்டு என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வுச் சான்றுகள் போதுமானதும் பொருத்தமானதுமென்பது எனது நம்பிக்கையாகும்.

1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் பிரதம கணக்கீட்டு அலுவலரினதும் கணக்கீட்டு அலுவலரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைவாகவும் உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை வெளிப்படுத்தும் வகையில் நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமான உள்ளக நிர்வாகத்தை தீர்மானிப்பது கணக்கீட்டு அலுவலரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் புடவைக் கைத்தொழில் திணைக்களத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு திணைக்களமானது அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் புடவைக் கைத்தொழில் திணைக்களத்தின் நிதி நிருவாகத்திற்காக பயனுள்ள உள்ளக கட்டுப்பாட்டு முறைமையொன்றைத் தயாரித்து பேணிச் செல்வதாக கணக்கீட்டு அலுவலர் உத்தரவாதப்படுத்த வேண்டுமென்பதோடு அந்த முறைமையின் ஆக்கவிளைவு தொடர்பாக காலத்துக்குக் காலம் மீளாய்வு செய்து அதன் பிரகாரம் முறைமையை பயனுள்ள வகையில் பேணிச் செல்வதற்குத் தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

1.4 நிதிக்கூற்றுக்களுக்கான கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஓட்டு மொத்தமாக, மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொடுப்பதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கையினை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கைக் கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கைக் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையொன்றைப் பெற்றுக்கொள்ளும்போது மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்வதற்காக சந்தர்ப்பத்திற்கேற்ப அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு

நடைமுறைகள் வடிவமைத்துச் செயற்படுத்தப்பட்டன. மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றைத் தெரிவிப்பதற்கு எதிர்பார்க்கப்படவில்லையென்ற போதிலும் சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவு பெற்றுக்கொள்ளப்பட்டது.
- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கம் மதிப்பீடு செய்யப்பட்டதோடு அதன்பொருட்டு அடிப்படையாக அமைந்த கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளதென்பது மதிபீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வின்போது இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வுக் கண்டுபிடிப்புகள், பிரதான உள்ளக கட்டுப்பாட்டுப் பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு அலுவலர் விழிப்பூட்டப்படுவார்.

1.5 ஏனைய சட்ட ரீதியான தேவைப்பாடுகள் பற்றிய அறிக்கை

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக் கூற்றுக்கள் கடந்த வருடத்துடன் ஒத்திசைவாகின்றன.

(ஆ) கடந்த வருடத்திற்கான நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பின்வரும் விதப்புரைகள் நடைமுறைபடுத்தப்பட்டிருக்கவில்லை.

கடந்த ஆண்டுக்கான அறிக்கையின் பந்திகளுக்குரிய தொடர்பு	நடைமுறைப்படுத்தப்படாத விதப்புரை	இந்த அறிக்கையின் பந்திகளுக்கான தொடர்பு
1.6.1, 1.6.2,1.6.3	நிதிப் பாய்ச்சல்கள் சரியாக நிதிப் பாய்ச்சல் கூற்றில் காட்டப்பட வேண்டும்.	1.6.4

1.6 நிதிக் கூற்றுக்கள் பற்றிய கருத்துரைகள் முன்வைக்கப்படுதல்

1.6.1 நிதியல்லா பெறுகைகள்

(அ) நிதி செயலாற்றுகைக் கூற்றில் திறைசேரிக்கு அனுப்பப்பட்டிருந்த 1,200,000 ரூபா காட்டப்பட்டிருக்கவில்லை என்பதோடு திறைசேரி கட்டுநிதி பெறுகைகள் 1,200,000 ரூபா குறைவாக காட்டப்பட்டிருந்தது.

(ஆ) நிதிப் பாய்ச்சல் கூற்றில் இதர வருமான தலைப்புகள் சார்பாக சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் முற்பண சேகரிப்பு முறையாக 1,715,831 ரூபா மற்றும் 1,149,760 ரூபா அதிகமாக காட்டப்பட்டிருந்ததன் காரணமாக தொழிற்பாட்டு செயற்பாடுகளின்

மூலம் உருவாகிய நிதிப் பாய்ச்சல் 2,865,591 ரூபாவினால் அதிகமாக கணக்கிடப்பட்டிருந்தது.

1.6.2 மீண்டெழும் செலவினங்கள்

நிதிப் பாய்ச்சல் கூற்றில் நிவாரணம் மற்றும் மாற்றல்கள் 2,865,591 ரூபா அதிகமாக காட்டப்பட்டிருந்ததன் விளைவாக தொழிற்பாட்டு நடவடிக்கைகளுக்காக செலவிடப்பட்ட நிதிப் பாய்ச்சல் அந்த அளவினால் அதிகமாக கணக்கிடப்பட்டிருந்தது.

1.6.3 நிதியல்லா சொத்துக்கள்

03 விசைத்தறி தொழிற்சாலைகள் அவை அமைந்துள்ள பிரதேச செயலகங்களுக்கு சாட்டப்பட்டிருந்த போதிலும் நிதியல்லா சொத்துக்கள் கூற்றிலிருந்து அந்த காணிகள் மற்றும் கட்டிடங்களுக்கான பெறுமதி அகற்றப்பட்டிருக்கவில்லை.

1.6.4 நிதிப் பாய்ச்சல் கூற்றில் முந்தைய ஆண்டுக்கான பெறுமதிகளை எடுத்துக்காட்டும்போது திருத்தப்பட்ட பெறுமதிகள் காட்டப்பட்டிருக்கவில்லை.

2. <u>**நிதி மீளாய்வு**</u>

2.1 <u>**வருமான முகாமைத்துவம்**</u>

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) யட்டிநுவர விசைத்தறி தொழிற்சாலையிலிருந்து 2000 – 2012 காலப்பகுதிக்காக கிடைக்க வேண்டிய நிலுவை குத்தகைத் தொகையில் 556,000 ரூபா மேற்கொண்டும் அறவிடப்பட வேண்டியிருந்தது.

(ஆ) தலல்ல மற்றும் ஹிங்குரக்கொடை விசைத்தறி தொழிற்சாலைகள் அமைந்துள்ள காணி மற்றும் கட்டிடங்களை குத்தகை அடிப்படையில் வழங்குவதற்கு ஏற்புடையதாக முறையே 1995 ஆம் ஆண்டு தொடக்கம் 2000 ஆம் ஆண்டு வரை மற்றும் 2016 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரை அறவிடப்பட வேண்டிய 9,431,000 ரூபா அறவிடப்பட்டிருக்கவில்லை.

(இ) பிபிலை விசைத்தறி தொழிற்சாலை அமைந்துள்ள காணி மற்றும் கட்டிடங்களை குத்தகை அடிப்படையில் வழங்குவதற்கு ஏற்புடையதாக அறவிடப்பட வேண்டிய 1,681,250 ரூபா அறவிடப்பட்டிருக்கவில்லை.

3. தொழிற்பாட்டு மீளாய்வு

3.1 செயலாற்றுகை

3.1.1 எதிர்பார்க்கப்பட்ட அடைவு மட்டம் பெறப்படாமை

14 நெசவுப் பயிற்சி நிறுவனங்கள் காணப்படுவதோடு ஒரு பயிற்சி நிறுவனத்திற்கு இணைத்துக்கொள்ளக்கூடிய மாணவர்களின் எண்ணிக்கை 25 ஆகும். நடத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த பாடநெறிகள் தொடர்பில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) ஆறுமாத கால பாடநெறிக்காக கட்டுபெத்த பயிற்சி நிறுவனத்திற்கு மட்டும் 2 மாணவர்கள் பதிவுசெய்திருந்ததோடு மாணவர்கள் பதிவு செய்துகொள்ளாமை

காரணமாக இதர 13 பயிற்சி நிறுவனங்களிலும் குறிப்பிட்ட பாடநெறியை நடத்த முடியாமல் போயிருந்தது.

(ஆ) இறுதிச் சான்றிதழ் பாடநெறிக்காக 110 மாணவர்கள் பதிவு செய்யப்பட்டிருந்தனர். அதில் கட்டுபெத்த உயர் வடிவமைப்புப் பயிற்சிப் பாடநெறிக்காக 13 மாணவர்கள் காணப்பட்டதோடு ஏனைய பயிற்சி நிறுவனங்களுக்காக பதிவு செய்யப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை 5கும் 9கும் இடைப்பட்டதாக காணப்பட்டது.

3.2 சொத்துக்களின் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 11 புடவைக் கைத்தொழில் பயிற்சி நிறுவனங்கள் மற்றும் 02 சுற்றுலா இல்லங்கள் திணைக்களத்திற்கு சுவீகரித்துக்கொள்ளப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) உரிமை துல்லியமாக இனங்காணப்படாத, காவலறையொன்றையும் 02 கட்டிடங்களையும் கொண்டமைந்த 30 பேச்சஸ் காணியொன்றான இராஜகிரியவில் அமைந்துள்ள இயற்கை வண்ணம் தீட்டும் நிலையம் 03 வருடங்களுக்கும் மேலாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) 2000 ஆம் ஆண்டு கொள்வனவு செய்யப்பட்ட 19,991,000 ரூபா பெறுமதியான 185 கைத்தறி தொகுதிகள் மற்றும் 146 வைன்டின் இயந்திரங்கள் 03 வருடங்களாக கட்டுபெத்த களஞ்சிய வளாகத்தில் பயன்படுத்தப்படாமல் காணப்பட்டது.

4. நல்லாட்சி

4.1 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

மீளாய்வு ஆண்டுக்காக திணைக்கள கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டங்கள் நடத்தப்பட்டிருக்கவில்லை.

எஸ்.எம்.சீ.இந்திகா
சிரேஷ்ட உதவிக் கணக்காய்வாளர் தலைமையதிபதி
கணக்காய்வாளர் தலைமையதிபதிக்குப் பதிலாக

அத்தியாயம் 04 : செயலாற்றுகைச் சுட்டிகள்

4.1 நிறுவனத்தின் செயலாற்றுகைச் சுட்டிகள்

விசேட சுட்டி	எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டின் வீதமாக(%) உண்மையான வெளியீடுகள்		
	100% - 90%	75% -89%	50% - 74%
1. நெசவுப் பயிற்சி நிறுவன நிர்வாகம் - 120 மாணவர்களை பயிற்றுவிப்பதற்கான ஆட்சேர்ப்பு நடவடிக்கைகளை ஆரம்பித்தல்	√		
2. கைத்தறி புடவைக் கைத்தொழில் சுய தொழில் கருத்திட்டங்கள் 10 ஐ ஆரம்பித்தல்	√		
3. கைத்தறி புடவைக் கைத்தொழில் சுய தொழில் கருத்திட்டங்கள் மூலம் 150 பயனாளிகளைப் பயிற்றுவித்தல்			√
4. சேவை நிலையப் பயிற்சிப் பாடநெறிகள் 20 ஐ நடாத்துதல்	√		
5. 80 தொழில்முயற்சியாளர்களை புடவைக் கைத்தொழில் துறைக்கு அறிமுகஞ் செய்தல்			√
6. 10 புத்தாக்க ஆக்கங்களை துறைக்காக உருவாக்குதல்	√		
7. கைத்தறி புடவைக் கைத்தொழில் துறையில் ஈடுபட்டுள்ள 100 கைத்தொழிலாளர்களுக்கு NVQ சான்றிதழ் வழங்குதல்	√		

அத்தியாயம் 05 : நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை (ளுனுபு) அடைவதற்கான செயலாற்றுகை

இலக்குகள்/நோக்கங்கள்	இலக்குகள்	சாதனைச் சுட்டிகள்	இதுவரையிலான சாதனையின் முன்னேற்றம்		
			0% - 49%	50%- 74%	75% - 100%
4.4 2030 ஆண்டளவில் கண்ணியமான தொழில்கள் மற்றும் தொழில்முயற்சி என்பவற்றுக்காக தொழில்நுட்ப மற்றும் தொழில்சார் தகைமைகள் உட்பட தேவையான தகைமைகளைப் பெற்றுள்ள இளைஞர்களினதும் பெரியவர்களினதும் எண்ணிக்கையை கணிசமான அளவில் அதிகரிக்கச் செய்தல்.	2030 ஆண்டளவில் கைத்தறி நெசவுத் தொழில் துறையில் 5000 தொழில்வாண்மயாளர்களுக்காக ஏேஞ மட்டம் 4 வழங்கப்படுதல்	2025 ஆம் ஆண்டளவில் 2500 தொழில்வாண்மையாளர்களுக்கு ஏேஞவழங்கப்படுதல்	√		
9.2 அனைவரும் உள்ளடங்குகின்றதும் நிலைபேறானதுமான கைத்தொழில்மயமாக்கத்தினை ஊக்குவித்தல், 2030 ஆண்டளவில் தேசிய நிலைமைகளுக்கு ஏற்புடையதான தொழில்வாய்ப்புக்களை வழங்கும்போது கைத்தொழில் துறையின் பங்களிப்பினை கோடிட்டுக் காட்டக்கூடிய வகையில் உயர்த்துதல் மற்றும் ஆகக்குறைந்தது அபிவிருத்தியடைந்துள்ள நாடுகளில் இப்பங்களிப்பினை இரு மடங்குகளாக மாற்றியமைத்தல்.	கைத்தறி துறையில் பங்களிப்பினை மேம்படுத்துவதன் மூலம் கைத்தொழில் துறையிலிருந்து மொத்தத் தேசிய உற்பத்திக்கு வழங்கப்படுகின்ற பங்களிப்பினை 2030 ஆம் ஆண்டில் 10%ஆக மாற்றுதல்.	2025 ஆம் ஆண்டில் மொத்தத் தேசிய உற்பத்திக்காக வழங்கப்படுகின்ற பங்களிப்பினை உயர்த்துதல்.	√		

அத்தியாயம் 06 : மனிதவள தோற்றப்பாடு

6.1 ஆளணி (பதவியணி) முகாமைத்துவம்

	அங்கீகரிக்கப்பட்ட பதவியணி	நடப்புப் பதவியணி	வெற்றிடங்கள் / மிகை
சிரேஸ்ட	07	05	02
மூன்றாம் நிலை	01	01	0
இரண்டாம் நிலை	95	86	09
ஆரம்பநிலை	42	28	14

6.2 நிறுவனத்திற்கான செயலாற்றுகை மீது மனித வளப் பற்றாக்குறை அல்லது மிகை தாக்கம் ஏற்படுத்தும் விதம்

- உள்ளக கணக்காய்வாளர் மற்றும் தொழில்நுட்ப அலுவலர் பதவி வெற்றிடங்கள் காரணமாக அது தொடர்பான கடமைகளில் இடர்பாடு காணப்படுகின்றமை.
- தகவல் தொழில்நுட்ப உத்தியோகத்தர் அல்லது உதவி தகவல் தொழில்நுட்ப உத்தியோகத்தர் பதவிக்குரிய ஆளணிக்கான அனுமதி கிடைக்காமையால் அது தொடர்பான விடயங்களை நிறைவேற்ற முடியாமை.
- முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் பதவி வெற்றிடங்களின் காரணமாக கணக்கு, நிர்வாகம் மற்றும் அபிவிருத்தி ஆகிய 03 பிரிவுகளிலும் கடமைகளை நிறைவேற்றுவதில் சிரமங்கள் ஏற்பட்டுள்ளன.

அத்தியாயம் 07 : இணக்க அறிக்கை

	ஏற்புடையதாக அமைத்துக்கொள்ளக்கூடிய தேவை	இணக்க நிலை(இணங்குகின்றது.்.இணங்கவில்லை)	இணங்கவில்லை எனில் அதற்கான தெளிவுபடுத்தல் சுருக்கமாக	இணங்காமையை எதிர்காலத்தில் தவிர்த்துக்கொள்வதற்காக முன்மொழியும் சரியான தீர்மான நடவடிக்கைமுறைகள்.
1	**பின்வரும் நிதிக்கூற்றுக்கள்.்.கணக்குகள் குறித்த திகதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன**			
1.1	வருடாந்த நிதிக் கூற்றுக்கள்	இணங்குகின்றது		
1.6	ஏனைய	-		
2	**புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் பேணப்படுதல்(நி.பி.445)**			
2.1	பொதுநிருவாக சுற்றறிக்கை 267/2018 இன்படி நிலையான சொத்துக்கள் பற்றிய பதிவேடு இற்றைபடுத்தப்பட்டு பேணப்பட்டு வருதல்	இணங்குகின்றது		
2.2	தனிப்பட்ட சம்பளப் பதிவேடுகள்/தனிப்பட்ட சம்பள அட்டைகள் இற்றைபடுத்தப்பட்டு பேணப்படுதல்	இணங்குகின்றது		
2.3	கணக்காய்வு விசாரணைப் பதிவேடுஇற்றைபடுத்தப்பட்டு பேணப்படுதல்	இணங்குகின்றது		
2.4	உள்ளகக் கணக்காய்வு அறிக்கைப் பதிவேடு இற்றைபடுத்தப்பட்டு பேணப்படுதல்	இணங்குகின்றது		
2.5	சகல மாதாந்தக் கணக்குச் சுருக்கங்களும் (ஊஐபுயுளு) தயாரிக்கப்பட்டு குறித்த திகதியில் பொதுத் திறைசேரிக்குச் சமர்ப்பிக்கப்படுதல்	இணங்குகின்றது		
2.6	காசோலை மற்றும் காசுக் கட்டளைப் பதிவேடுஇற்றைபடுத்தப்பட்டு பேணப்படுதல்	இணங்குகின்றது		
2.7	பொருட்பதிவேடு இற்றைபடுத்தப்பட்டு பேணப்படுதல்	இணங்குகின்றது		

	ஏற்புடையதாக அமைத்துக்கொள்ளக்கூடிய தேவை	**இணக்க நிலை(இணங்குகின்றது.'.இணங்கவில்லை)**	**இணங்கவில்லை எனில் அதற்கான தெளிவுபடுத்தல் சுருக்கமாக**	**இணங்காமையை எதிர்காலத்தில் தவிர்த்துக்கொள்வதற்காக முன்மொழியும் சரியான தீர்மான நடவடிக்கைமுறைகள்.**
2.8	இருப்புப் பதிவேடு இற்றைபடுத்தப்பட்டு பேணப்படுதல்	இணங்குகின்றது		
2.9	சேத இழப்புப் பதிவேடு இற்றைபடுத்தப்பட்டு பேணப்படுதல்	இணங்குகின்றது		
2.10	பொறுப்புக்கள் பற்றிய பதிவேடு இற்றைபடுத்தப்பட்டு பேணப்படுதல்	இணங்குகின்றது		
2.11	அடிச்சீட்டு புத்தகப் பதிவேடு (புயு-G20) இற்றைபடுத்தப்பட்டு பேணப்படுதல்	இணங்குகின்றது		
03	**நிதி நிர்வாகத்திற்காக செயற்பாடுகளை ஒப்படைத்தல் (நி.பி.135)**			
3.1	நிதி அதிகாரம் நிறுவனத்தினுள் ஒப்படைக்கப்பட்டிருத்தல்	இணங்குகின்றது		
3.2	நிதி அதிகாரம் நிறுவனத்திற்குள் ஒப்படைக்கப்பட்டிருத்தல் தொடர்பாக விழிப்பூட்டப்பட்டிருத்தல்	இணங்குகின்றது		
3.3	சகல கொடுக்கல் வாங்கல்களும் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட உத்தியோகத்தர்கள் மூலம் அங்கீகரிக்கப்படுகின்ற வகையில் அதிகாரம் ஒப்படைக்கப்பட்டிருத்தல்	இணங்குகின்றது		
3.4	2014.05.11ஆம் திகதிய 171/2004 ஆம் இலக்கமுடைய பொதுக் கணக்குச் சுற்றறிக்கையின் பிரகாரம் அரசாங்கத்தின் சம்பள அட்டை மென்பொருள் பக்கேஜ் பயன்படுத்தப்படும்போது கணக்காளரின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டு செயற்படுதல்	இணங்குகின்றது		

	ஏற்புடையதாக அமைத்துக்கொள்ளக்கூடிய தேவை	இணக்க நிலை(இணங்குகின்றது.'.இணங்கவில்லை)	இணங்கவில்லை எனில் அதற்கான தெளிவுபடுத்தல் சுருக்கமாக	இணங்காமையை எதிர்காலத்தில் தவிர்த்துக்கொள்வதற்காக முன்மொழியும் சரியான தீர்மான நடவடிக்கைமுறைகள்.
4	**வருடாந்தத் திட்டங்களைத் தயாரித்தல்**			
4.1	வருடாந்த செயற்பாட்டுத் திட்டம் தயாரிக்கப்படுதல்	இணங்குகின்றது		
4.2	வருடாந்த பெறுகைத் திட்டம் தயாரிக்கப்படுதல்	இணங்குகின்றது		
4.3	மீளாய்வாண்டுக்காக 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி சட்டத்தின் பிரகாரம் வரவு செலவுத்திட்டம் அங்கீகரித்துக்கொள்ளப்பட்டிருத்தல்.	இணங்குகின்றது		
4.4	வருடாந்த உள்ளக கணக்காய்வுத் திட்டம் தயாரிக்கப்படுதல்	இணங்கவில்லை	அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் ஒரு உள்ளகக் கணக்காய்வாளர் இல்லாமை	அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவரை அங்கீகரித்துக்கொள்ளல்
4.5	வருடாந்த மதிப்பீடு தயாரிக்கப்பட்டு தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களத்திற்கு(டீனு) குறித்த திகதியில் சமர்ப்பிக்கப்படுதல்	இணங்குகின்றது		
4.6	வருடாந்த காசுப் பாய்ச்சல் கூற்று குறித்த திகதியில் திறைசேரியின் தொழிற்பாட்டுத் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருத்தல்	இணங்குகின்றது		
4.7	காலாண்டு அறிக்கைகள் குறித்த திகதியில் பொதுத் திறைசேரிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருத்தல்	இணங்குகின்றது		
5	**கணக்காய்வு விசாரணை**			

	ஏற்புடையதாக அமைத்துக்கொள்ளக்கூடிய தேவை	**இணக்க நிலை(இணங்குகின்றது.˙.இணங்கவில்லை)**	**இணங்கவில்லை எனில் அதற்கான தெளிவுபடுத்தல் சுருக்கமாக**	**இணங்காமையை எதிர்காலத்தில் தவிர்த்துக்கொள்வதற்காக முன்மொழியும் சரியான தீர்மான நடவடிக்கைமுறைகள்.**
5.1	கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் குறித்துரைக்கப்பட்டுள்ள திகதியில் அனைத்துக் கணக்காய்வு விசாரணைகளுக்கும் பதில் வழங்கப்படுதல்	இணங்குகின்றது		
6	**உள்ளகக் கணக்காய்வு**			
6.1	நி.பி.134(2) னுஆயு/1-2019 இன்படி, வருட ஆரம்பத்தில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியுடன் கலந்துரையாடப்பட்டதன் பின்னர் உள்ளகக் கணக்காய்வுத் திட்டம் தயாரிக்கப்படுதல்	இணங்கவில்லை	அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் ஒரு உள்ளகக் கணக்காய்வாளர் இல்லாமை	அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவரை அங்கீகரித்துக்கொள்ளல்
6.2	சகல உள்ளக கணக்காய்வு அறிக்கைகளுக்கும் ஒரு மாதத்திற்குள் பதில் வழங்கப்பட்டிருத்தல்	இணங்குகின்றது		
6.3	2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 40(4) உப பிரிவின் பிரகாரம் சகல உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளுக்குமான பிரதிகள் முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருத்தல்	இணங்கவில்லை	அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் ஒரு உள்ளகக் கணக்காய்வாளர் இல்லாமை	அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவரை அங்கீகரித்துக்கொள்ளல்
6.4	நிதிப் பிரமாணம் 134(3) இன் பிரகாரம் சகல உள்ளக கணக்காய்வு அறிக்கைகளுக்குமான பிரதிகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருத்தல்	இணங்குகின்றது		
7	**கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கள்**			

	ஏற்புடையதாக அமைத்துக்கொள்ளக்கூடிய தேவை	இணக்க நிலை(இணங்குகின்றது.∴.இணங்கவில்லை)	இணங்கவில்லை எனில் அதற்கான தெளிவுபடுத்தல் சுருக்கமாக	இணங்காமையை எதிர்காலத்தில் தவிர்த்துக்கொள்வதற்காக முன்மொழியும் சரியான தீர்மான நடவடிக்கைமுறைகள்.
7.1	னுஆயு சுற்றறிக்கை 1-2019 இன் பிரகாரம் ஆகக் குறைந்தது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கள் 4 ஏனும் உரிய வருடத்தில் நடத்தப்பட்டிருத்தல்	இணங்கவில்லை	அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் ஒரு உள்ளகக் கணக்காய்வாளர் இல்லாமை	அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவரை அங்கீகரித்துக்கொள்ளல்
8	**சொத்துக்களுக்கான முகாமைத்துவம்**			
8.1	01/2017 ஆம் இலக்க சொத்துக்களுக்கான முகாமைத்துவ சுற்றறிக்கையின் 07 ஆம் அத்தியாயத்தின் பிரகாரம் சொத்துக்களுக்கான கொள்வனவு மற்றும் அகற்றல் பற்றிய தகவல்கள் கொம்ப்ட்ரோலர் ஜெனரல் அலுவலகத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருத்தல்	இணங்குகின்றது		
8.2	மேற்படி சுற்றறிக்கையின் 13 ஆம் அத்தியாயத்தின் பிரகாரம் அச்சுற்றறிக்கையின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்குப் பொருத்தமான தொடர்பு உத்தியோகத்தரை நியமித்து குறிப்பிட்ட உத்தியோகத்தர் தொடர்பாக கொம்ப்ட்ரோலர் ஜெனரல் அலுவலகத்திற்கு அறிக்கையிட்டிருத்தல்	இணங்குகின்றது		
8.3	பொதுநிதிச் சுற்றறிக்கை இலக்கம் 05/2016 இன் படி பொருட் கணிப்பீடுகள் நடத்தப்பட்டு உரிய அறிக்கைகள் குறித்த திகதியில் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருத்தல்	இணங்குகின்றது		

	ஏற்புடையதாக அமைத்துக்கொள்ளக்கூடிய தேவை	**இணக்க நிலை(இணங்குகின்றது.\.இணங்கவில்லை)**	**இணங்கவில்லை எனில் அதற்கான தெளிவுபடுத்தல் சுருக்கமாக**	**இணங்காமையை எதிர்காலத்தில் தவிர்த்துக்கொள்வதற்காக முன்மொழியும் சரியான தீர்மான நடவடிக்கைமுறைகள்.**
8.4	வருடாந்த பொருட் கணிப்பீட்டின் மூலம் வெளிக்கொணரப்பட்ட மிகை, பற்றாக்குறை மற்றும் ஏனைய விதப்புரைகள் சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்டிருத்தல்	இணங்குகின்றது		
8.5	பயனற்ற பொருட்களுக்கான அப்புறப்படுத்தல் நி.பி.772 இன் பிரகாரம் மேற்கொள்ளப்படுதல்	இணங்குகின்றது		
9	**வாகன முகாமைத்துவம்**			
9.1	ஒதுக்கத்தின் வாகனங்கள் தொடர்பாக தினசரி ஓட்டக் குறிப்புகள் மற்றும் மாதாந்த சுருக்க அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு குறித்த திகதியில் கணக்காய்வாளருக்குச் சமர்ப்பித்தல்	இணங்குகின்றது		
9.2	வாகனங்கள் பயனற்றதாகமாறி 06 மாதங்களுக்கும் குறைவான காலப்பகுதியில் அகற்றப்பட்டிருத்தல்	இணங்குகின்றது		
9.3	வாகன லொக் புத்தகங்கள் பேணப்பட்டு அவை இற்றைப்படுத்தப்பட்டு பேணிச் செல்லப்படுதல்	இணங்குகின்றது		
9.4	ஒவ்வொரு வாகன விபத்துத் தொடர்பாகவும் நி.பி.103,104,109 மற்றும் 110 இன் பிரகாரம் நடவடிக்கையெடுத்தல்	இணங்கவில்லை	காப்புறுதி மூலம் இழப்பு மீளளிப்புச் செய்துகொள்ளப்படுதல்	தொடர்படைய தரப்பினர்களிடமிருந்து உரிமைகோரல் அல்லாத கொடுப்பனவுக்கான மீளளிப்பு
9.5	2016.12.29 ஆம் திகதிய 2016/30ஆம் இலக்கமுடைய பொது நிருவாகச் சுற்றறிக்கையின் 3.1 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் வாகனங்களின் எரிபொருள் எரிதல் மீண்டும் பரிசோதிக்கப்படுதல்	இணங்குகின்றது		

	ஏற்புடையதாக அமைத்துக்கொள்ளக்கூடிய தேவை	இணக்க நிலை(இணங்குகின்றது.˙.இணங்கவில்லை)	இணங்கவில்லை எனில் அதற்கான தெளிவுபடுத்தல் சுருக்கமாக	இணங்காமையை எதிர்காலத்தில் தவிர்த்துக்கொள்வதற்காக முன்மொழியும் சரியான தீர்மான நடவடிக்கைமுறைகள்.
9.6	குத்தகைக் காலப்பகுதியின் பின்னர் குத்தகை வாகனங்களின் முழுமையான உரிமை மாற்றப்பட்டிருத்தல்	இணங்குகின்றது		
10	**வங்கி கணக்குகளுக்கான முகாமைத்துவம்**			
10.1	வங்கி இணக்கக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு,உறுதிபடுத்தப்பட்டு உரிய தேதிக்குள் கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்பட்டிருத்தல்	இணங்குகின்றது		
10.2	மீளாய்வாண்டில் அல்லது முந்தைய ஆண்டுகளில் இருந்து வந்த செயலற்ற வங்கிக் கணக்குகள் தீர்க்கப்பட்டிருத்தல்	இணங்குகின்றது		
10.3	வங்கி இணக்கக் கூற்றுக்கள் மூலம் வெளிப்படுத்தப்பட்ட மற்றும் சீராக்கல்கள் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்தநிலுவைகள் தொடர்பாக நிதிப் பிரமாணங்களின்படிசெயற்பட்டு குறித்த நிலுவைகள் ஒரு மாதத்திற்குள் தீர்க்கப்பட்டிருத்தல்	இணங்குகின்றது		
11	**ஏற்பாடுகளின் பயன்பாடு**			
11.1	மேற்கொள்ளப்பட்டிருந்த ஒதுக்கீடுகள் அவற்றின் வரம்புகள் மீறப்படாமல் செலவிடப்படுதல்	இணங்குகின்றது		
11.2	நி.பி.94(1) இன் பிரகாரம் வருட இறுதியில் எஞ்சியுள்ள ஏற்பாடுகளை விஞ்சிச் செல்லாத பொறுப்புக்கள்	இணங்குகின்றது		
12	**அரச ஊழியர்களின் முற்பணக் கணக்கு**			
12.1	எல்லைகளுக்கு இணங்குதல்	இணங்குகின்றது		

	ஏற்புடையதாக அமைத்துக்கொள்ளக்கூடிய தேவை	இணக்க நிலை(இணங்குகின்றது.˙.இணங்கவில்லை)	இணங்கவில்லை எனில் அதற்கான தெளிவுபடுத்தல் சுருக்கமாக	இணங்காமையை எதிர்காலத்தில் தவிர்த்துக்கொள்வதற்காக முன்மொழியும் சரியான தீர்மான நடவடிக்கைமுறைகள்.
12.2	நிலுவைக் கடன் தொடர்பாக காலப் பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.	இணங்குகின்றது		
12.3	ஒரு வருடத்திற்கும் மேலாக இருந்து வருகின்ற நிலுவைக் கடன்கள் தீர்க்கப்பட்டுள்ளன.	இணங்குகின்றது		
13	**பொது வைப்புக்கணக்கு**			
13.1	காலங்கடந்த வைப்புக்கள் தொடர்பாக நி.பி.571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருத்தல்	இணங்குகின்றது		
13.2	பொது வைப்புகளுக்கான கட்டுப்பாட்டுக் கணக்கு இற்றைப்படுத்தப்பட்டு பேணப்பட்டு வருதல்	இணங்குகின்றது		
14	**பணி முற்பணக் கணக்கு**			
14.1	மீளாய்வாண்டின் இறுதியில் காசுப் புத்தகத்தின் நிலுவை திறைசேரியின் தொழிற்பாட்டுத் திணைக்களத்திற்குஅனுப்பப்பட்டிருத்தல்	இணங்குகின்றது		
14.2	நி.பி.371இன் பிரகாரம் விநியோகிக்கப்பட்ட குறிப்பிட்ட பணிக்கான துணைப் பணி முற்பணம் குறிப்பிட்ட பணி முடிவடைந்து ஒரு மாதத்திற்குள் தீர்க்கப்படுதல்	இணங்குகின்றது		
14.3	நி.பி.371 இன் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட எல்லை மீறப்படாத வகையில் குறித்த பணிக்கான துணைப் பணி முற்பணம் விநியோகிக்கப்பட்டிருத்தல்	இணங்குகின்றது		
14.4	பணி முற்பணக் கணக்கின் நிலுவை திறைசேரியின் புத்தகங்களுடன் மாதாந்தம் இணக்கம் செய்யப்படுதல்	இணங்குகின்றது		
15	**வருமானக் கணக்கு**			

	ஏற்புடையதாக அமைத்துக்கொள்ளக்கூடிய தேவை	இணக்க நிலை(இணங்குகின்றது.'.இணங்கவில்லை)	இணங்கவில்லை எனில் அதற்கான தெளிவுபடுத்தல் சுருக்கமாக	இணங்காமையை எதிர்காலத்தில் தவிர்த்துக்கொள்வதற்காக முன்மொழியும் சரியான தீர்மான நடவடிக்கைமுறைகள்.
15.1	குறிப்பிட்ட ஒழுங்குவிதிகளுக்கு அமைவாக திரட்டப்பட்ட வருமானத்தில் மீள் செலுத்தல் மேற்கொள்ளப்பட்டிருத்தல்	இணங்குகின்றது		
15.2	திரட்டப்பட்டிருந்த வருமானம் வைப்புக் கணக்கில் வரவு வைக்கப்படாமல் நேரடியாக வருமானத்தில் வரவு வைக்கப்பட்டிருத்தல்	இணங்குகின்றது		
15.3	நி. பி. 176 இன்படி நிலுவை வருமான அறிக்கைகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்டிருத்தல்	இணங்குகின்றது		
16	**மனித வள முகாமைத்துவம்**			
16.1	அங்கீகரிக்கப்பட்ட பதவியணி எல்லைக்குள் பதவியணி பேணப்பட்டு வருதல்	இணங்குகின்றது		
16.2	பதவியணியின் சகல அங்கத்தவர்களுக்கும் கடமைப் பட்டியல்கள் எழுத்துமூலம் வழங்கப்பட்டுள்ளன.	இணங்குகின்றது		
16.3	2017.09.20 ஆம் திகதிஆளுனுசுற்றறிக்கை இலக்கம் 04/2017 இன் பிரகாரம் சகல அறிக்கைகளும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருத்தல்	இணங்குகின்றது		
17	**பொதுமக்களுக்கு தகவல்கள் வழங்கப்படுதல்**			
17.1	தகவல் அறிவதற்கான சட்டம் மற்றும் ஒழுங்குவிதிகளின் பிரகாரம் தகவல் உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டு தகவல் வழங்கும் பதிவேடொன்று இற்றைப்படுத்தப்பட்டு பேணப்படுதல்	இணங்குகின்றது		

	ஏற்புடையதாக அமைத்துக்கொள்ளக்கூடிய தேவை	இணக்க நிலை(இணங்குகின்றது.∴.இணங்கவில்லை)	இணங்கவில்லை எனில் அதற்கான தெளிவுபடுத்தல் சுருக்கமாக	இணங்காமையை எதிர்காலத்தில் தவிர்த்துக்கொள்வதற்காக முன்மொழியும் சரியான தீர்மான நடவடிக்கைமுறைகள்.
17.2	நிறுவனம் பற்றிய தகவல்கள் அதன் வலைதளத்தின் ஊடாக அல்லது மாற்றுவழிகளின் ஊடாக பொதுமக்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அவற்றின் ஊடாக மக்களின் பாராட்டுக்களை.∴.குற்றச்சாட்டுக்களை முன்வைப்பதற்கான வசதி வழங்கப்பட்டுள்ளது.	இணங்குகின்றது		
17.3	தகவல் அறிவிதற்கான சட்டத்தின் 08ஆம் மற்றும் 10 ஆம பிரிவுகளின் பிரகாரம் வருடத்திற்கு ஒரு தடவை அல்லது இருதடவை அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.	இணங்குகின்றது		
18	**பிரஜைகள் சாசனம் நடைமுறைபடுத்தப்படுதல்**			
18.1	05/2008 ஆம் இலக்க மற்றும் 05/2018(1) ஆம் இலக்கமுடைய பொதுநிருவாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் சுற்றறிக்கையின் பிரகாரம் பிரஜைகள் ∴ சேவைபெறுநர் சாசனம் தயாரிக்கப்பட்டு நடைமுறைபடுத்தப்பட்டிருத்தல்	இணங்குகிறது		
18.2	குறிப்பிட்ட சுற்றறிக்கையின் 2.3 ஆம் பந்தியின் பிரகாரம் பிரஜைகள் ∴ சேவைபெறுநர் சாசனம் தயாரிக்கப்படுதல் மற்றும் நடைமுறைபடுத்தப்படுதல் நடவடிக்கைகளுக்கான மேற்பார்வை மற்றும் மதிப்பீட்டு நடவடிக்கைகளுக்காக நிறுவனத்தினால் முறையொன்று தயாரிக்கப்பட்டிருத்தல்.	இணங்குகிறது		
19	**மனித வளத் திட்டம் தயாரிக்கப்படுதல்**			

	ஏற்புடையதாக அமைத்துக்கொள்ளக்கூடிய தேவை	இணக்க நிலை(இணங்குகின்றது.̇.இணங்கவில்லை)	இணங்கவில்லை எனில் அதற்கான தெளிவுபடுத்தல் சுருக்கமாக	இணங்காமையை எதிர்காலத்தில் தவிர்த்துக்கொள்வதற்காக முன்மொழியும் சரியான தீர்மான நடவடிக்கைமுறைகள்.
19.1	2018.01.24 ஆம் திகதிய பொது நிருவாக சுற்றறிக்கை இலக்கம் 02/2018 இணைப்பு 02 மாதிரியை அடிப்படைக்கொண்டு மனித வளத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.	இணங்குகிறது		
19.2	பதவியணியைச் சேர்ந்த சகல அங்கத்தவர்களுக்காகவும் வருடமொன்றில் ஆகக் குறைந்தது 12 மணித்தியாலங்களுக்குக் குறையாத பயிற்சி வாய்ப்பு மேற்படி மனித வளத் திட்டத்தில் உறுதிபடுத்தப்பட்டிருத்தல்	இணங்குகிறது		
19.3	மேற்படி சுற்றறிக்கையின் இணைப்பு 01 இல் தரப்பட்டுள்ள மாதிரியை அடிப்படையாகக் கொண்டு ஒட்டுமொத்த பணியாட்டொகுதிக்கும் வருடாந்த செயலாற்றுகை ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டிருத்தல்	இணங்கவில்லை	வகுப்பதற்கு இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை	வகுப்பதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும்.
19.4	மேற்படி சுற்றறிக்கையின் 6.5 ஆம் பந்தியின் பிரகாரம் மனித வள அபிவிருத்தித் திட்டம் தயாரிக்கப்படுதல், ஆற்றல் விருத்தித் திட்டம் தயாரிக்கப்படுதல் திறன் மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டங்கள் நடைமுறைபடுத்தப்படுதல் பற்றிய பொறுப்புகள் ஒப்படைக்கப்பட்டு சிரேஸ்ட உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டிருத்தல்	இணங்குகிறது		
20	**கணக்காய்வுப் பந்திகளுக்கு பதிற் செயற்பாடு காட்டுதல்**			
20.1	கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் கடந்த வருடங்கள் தொடர்பாக விநியோகிக்கப்பட்ட கணக்காய்வுப் பந்திகளின் மூலம் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகள் சரிசெய்யப்பட்டிருத்தல்	இணங்குகின்றது		